

தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு தமிழ்நாடு திரும்பிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (8.9.2025) சென்னை விமான நிலையத்திலிருந்து இல்லம் செல்லும் வழிநெடுகிலும் பொதுமக்கள், தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (08.09.2025) வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, விருகம்பாக்கம் கால்வாயில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் தூர்வாருதல், தடுப்புச் சுவரினை உயர்த்திக் கட்டுதல், சங்கிலிவேலி அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே. மோகன், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி. வினய், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந. இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் கூ.பி. ஜெயின் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### விருகம்பாக்கம் கால்வாயில்

# ரூ. 30 கோடி மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.9-

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விருகம்பாக்கம் கால்வாயில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர் வாருதல், தடுப்புச் சுவரினை உயர்த்திக் கட்டுதல், சங்கிலி வேலி அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியானது 81.13 கி.மீ நீளத்திற்கு 44 நீர்வழி கால்வாய்களை பராமரித்து வருகிறது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நீர்வளத்துறை யின் பராமரிப்பில் இருந்த ஓட்டேரி நல்லா கால்வாய், விருகம்பாக்கம் மற்றும் வீராங்கல் ஓடை ஆகிய நீர்வழிக் கால்வாய்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புகளைத் தடுத்திடும் வகையில், மழைநீர் வடிகால்வாய் கட்டுதல், மழைநீர் வடிகால்வாய் தூர்வாருதல், நீர்வழிக் கால்வாய்களில் தூர்வாரி கட்டமைப்புகளை மேம்படுத்துதல், குளங்களைப் புனரமைத்தல், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல் என பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விருகம்பாக்கம் நீர்வழிக்கால் வாய் விருகம்பாக்கத்தில் உள்ள புவனேஷ்வரி நகரிலிருந்து தொடங்கி சின்மயா நகர், சாலிகிராமம், எம்.எம்.டி.ஏ காலனி வழியாக கூவம் ஆற்றினை சென்றடைகிறது. விருகம் பாக்கம் நீர் வழிக் கால்வாயின் நீளம் 6.70 கீ.மீ ஆகும். இந்த நீர்வழிக் கால்வாயின் அகலம்8 மீட்டர் முதல் 25 மீட்டர் வரை உள்ளது.

விருகம்பாக்கம் நீர்வழிக் கால்வாயில், நீரியியல் வல்லுநர் மூலம் உரிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கையின் அடிப்படையில், மாநகராட்சியின் மூலதன நிதியிலி ருந்து கால்வாயில் 6.36 கி.மீ. நீளத்திற்கு 1,07,200 கனமீட்டர் கொள்ளளவிற்கு தூர்வாரும் பணி, 1,490 மீட்டர் நீளத்திற்கு கால்வாயின் பக்கச்சுவரினை உயர்த்தி, அதன் மேல் சங்கிலிவேலி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.9.2025) சென்னை அரும்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் கால்வாயில் 30.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர் வாருதல், தடுப்புச் சுவரினை உயர்த்திக் கட்டுதல், சங்கிலி வேலி அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

மேலும், மேற்கொள்ளப்படவுள்ள மேம்பாட்டு பணிகள் குறித்த திட்ட வரைபடத்தினை பார்வையிட்டு, கால்வாய் செல்லும் பகுதிகளின் விவரங்கள், கடந்த ஆண்டுகளில் பாதிக்கப்பட்ட பகுதிகள், மேற்கொள்ளப்பட உள்ள பணிகளின் விவரங்கள் குறித்து அலுவலர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம், அண்ணா நகர் மண்டலத்திற்குட்பட்ட திருக்குமரபுரம், அன்னை சத்யா நகர், வீரபாண்டி நகர், காமராஜர் நகர், லோகநாக நகர், பத்மநாப நகர், ஆசாத் நகர், கலெக்டர் காலனி, எம்.எம்.டி.ஏ. காலனி, ஔவை நகர், எம்.எச். காலனி, மங்கள் நகர், கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட சின்மயா நகர், சாய்நகர், திருவள்ளுவர் நகர், திருநகர், வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட புவனேஸ்வரி நகர், அன்னம்மாள் நகர், நெற்குன்றம், தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட திருவள்ளுவர் புரம், கில் நகர், நமச்சிவாயபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள் பெரிதும் பயனடைவர்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே. மோகன், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு. மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குனர் டாக்டர் டி.ஜி.வினய், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் கூ.பி. ஜெயின் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### செங்கல்பட்டு தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் —

### இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்திற்கு வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு மறைமலைநகரில் உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப்.9-

மறைமலைநகரில் நாளை 10-ஆம் தேதி காலை நடைபெறும் செங்கல்பட்டு தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் - இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுக கூட்டத்திற்கு வருகை தரும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மறைமலைநகர் நகராட்சி அலுவலகம் எதிரில் கழகத்தினர் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



செங்கல்பட்டு தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் -மறைமலை நகர் நகராட்சி சமுதாயக்கூடத்தில் நாளை 10- ஆம் தேதி காலை 8.00 மணியளவில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு செங்கல்பட்டு தொகுதியில் அடங்கிய ஒன்றிய-நகர நிர்வாகிகள், வார்டு - கிளைக்கழக செயலாளர்கள்- உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோரிடம் கலந்தாலோசனை நடத்த உள்ளார்.

நாளை காலை 9.00 மணியளவில் இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுக கூட்டம் மறைமலைநகர் நகராட்சி விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில், துணை முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு ஒன்றிய-நகர-வார்டு- இளைஞர் அணி நிர்வாகிகளிடம் கலந்தாலோசனை நடத்த உள்ளார்.

மறைமலை நகரில் நாளை நடைபெறும் செங்கல்பட்டு தொகுதியில் அடங்கிய கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுக கூட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதல்வர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மறைமலைநகர் நகராட்சி அலுவலகம் எதிரில் மாவட்ட தி.மு.க சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இந்த பிரம்மாண்டமான வரவேற்பில் மாவட்டம் முழுவதிலும் இருந்து மாவட்ட கழக நிர்வாகிகள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய-நகர- பகுதி- பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் - உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் இந்த வரவேற்பில் அவசியம் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மறைமலைநகரில் மாவட்ட திமுக சார்பில் நடைபெறும் வரவேற்பில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் மற்றும் இளைஞர் அணியினர் அலை கடலென திரண்டு வந்து தமது கரங்களில் கழகத்தின் இலட்சிய இருவண்ணக் கொடியேந்தி மகிழ்ச்சியுடன் பெரும் கூட்டமாக திரண்டு நின்று வரவேற்பு அளிக்கும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

# அந்த 7 நாட்கள்!



அந்த 7 நாட்கள்!
வாரத்தில் வரும் நாட்கள்அல்ல;
வரலாறு படைத்த நாட்கள்!
“திரைகடலோடியும் திரவியம் தேடு”
என்று அவ்வை சொன்னது,
தனிமனிதனுக்கு மட்டுமல்ல;
ஆட்சியில் இருப்பவர்களுக்கும் தான்
என்று முடிவெடுத்து,
ஜெர்மன் நாட்டிற்கும், இங்கிலாந்து நாட்டிற்கும்,
திரவியம் திரட்டச் சென்றுவந்தார்
நம் முதல்வர் தளபதியார்!

ஜெர்மன்!
ஒருகாலத்தில்உலகையே
ஒருகுடையின்கீழ் கொண்டுவரவேண்டும்
என்ற பேராசையால்
உலகையே கிடுகிடுக்கவைத்த
ஹிட்லர் வாழ்ந்த பூமி ஜெர்மன்!
இரண்டாவது உலகப்போருக்குப்பின்
நாடு நிலைகுலைந்துபோனது!
முடங்கிப் போன தொழில்கள்;
வறுமையால் வதங்கிப் போன மக்கள்;
நாடே இரண்டானது!
கிழக்கு மேற்கு என்றிருந்த நாடு இன்று
தொழில்துறை; கல்வித்துறை;
உணவுத்துறை போன்றவற்றில்
உலகநாடுகளோடு போட்டிபோட்டு நிற்கிறது!

இலண்டன்!
இங்கிலாந்து நாட்டின் தலைநகர் இலண்டன்!
“மூர்த்தி சிறிது என்றாலும் கீர்த்தி பெரிது”
என்ற பழமொழி
இங்கிலாந்து நாட்டிற்குத் தான் பொருந்தும்!
யுத்தத்திலிருந்து உலகைக்
காப்பாற்றியது லண்டன்!
எல்லாவற்றிற்கும் மேலாக,
நம்மை 250 ஆண்டுகளுக்கும்
மேலாக ஆண்ட நாடு!
எனினும், ஜனநாயகம்
பழுதுபடாமல் இருக்கிறது!
அதனால் அந்த நாட்டு அமைச்சரோடு
நம் தலைவர் தளபதி சரியாசனத்தில்
அமர்ந்து உரையாடியிருக்கிறார்!

ஜெர்மன், இங்கிலாந்து
இந்த இரு பெரும் நாடுகளில்
நம் முதல்வர் தளபதியார் திரட்டிவந்த
தொழில்துறைமுதலீடுகள் 15,516கோடி!
இந்த முதலீடுகள் தொழிற்சாலைகளாக
இங்கேஉருமாறி நிற்கும் போது
17,613 நபர்களுக்கு
வேலைவாய்ப்பு கிடைக்கும் என்கிறார்கள்!
இத்தனை வெற்றிகளையும் தளபதிபெற்றது
அந்த ஏழு நாட்களில்தான்!
அடுத்து,
தமிழனாக!
தமிழ்த் தலைவராக!
தமிழ்நாட்டின் முதல்வராக!
தன்மானச் சுடராக!
சுயமரியாதைக் கொள்கைக்காரனாக!
எல்லாவற்றிற்கும் மேலாக
தலைவர் கலைஞரின் மகனாகநின்று
வரலாற்றுநிகழ்வை நடத்தியிருக்கிறார்
தளபதி அவர்கள்!

“ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்”
உலகப் புகழ்பெற்றது!
உலகத்தில் உள்ள பல்கலைக் கழகத்திற்குத்
தாயானது!
உலகத்தில்தோன்றியமுதல்பல்கலைக்கழகம்!
இந்தப் பல்கலைக்கழகம்
எப்போது எவ்வாறு தோன்றியது
என்று யாருக்கும் தெரியாதாம்!
ஆனால், கற்பிக்கத் தொடங்கியது
1096 ஆம் ஆண்டாம்!
ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில்
உரையாற்றுவது என்பதும்,
அங்கே பெரியார் படத்தைத் திறப்பது என்பதும்,
சாதாரண நிகழ்ச்சி அல்ல
என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்!
உலகத்தில் தலைசிறந்த
அரசியல் அறிஞர்கள்!
கல்வியில் சிறந்த மேதைகள்!
விஞ்ஞான விற்பன்னர்கள்!
விடுதலை வீரர்கள்!
புதுமைகளைக் கண்டுபிடித்தோர்
போன்றவர்கள் மட்டும்தான்
ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக
மேடையில் இடம் பெறுவார்கள்!

இதோ,
எங்கள் தலைவர் தளபதிக்கு
அந்த மேடை இடம் கொடுத்துவிட்டது!
மேடையில் ஏறியது மட்டும் அல்ல;
பெரியார் படத்தையும் திறந்து வைத்து
தளபதி உரையாற்றி இருக்கிறார்!
இந்தப் புகழ் இந்தியாவில்
ஒருவருக்கு மட்டும்தான் கிடைக்கும்
அந்தப்புகழைப்பெற்று
நாடு திரும்பி இருக்கும் தளபதியே!
எங்கள் முதல்வரே!
எங்களுக்குக் கிடைத்த
இரண்டாம் கலைஞரே!
நீர் நீடூழி வாழ்க!



**அமைச்சர் துரைமுருகன்**
கழகப் பொதுச் செயலாளர்



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சென்னை தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை நடைபெற்று வரும் நான்கு வழித்தட உயர்மட்ட மேம்பாலம் பணிகளை நேற்று (08.09.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, மெட்ரோ சுரங்கப் பாதை மற்றும் பிற இடங்களில் நடைபெறும் அடித்தள, மைக்ரோ பைல், ஜியோ சிந்தடிக் லேயர் மற்றும் வெல்டிங் பணிகளை விரைவாக முடிக்கவும். மழைக்காலத்திற்கு முன் அடித்தள பணிகள் நிறைவு பெறும் வகையில் வேகப்படுத்தவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது தலைமை பொறியாளர் சத்திய பிரகாஷ், சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் சந்திரசேகர், கண்காணிப்பு பொறியாளர் சரவண செல்வம், ஒப்பந்ததாரர் ஜே. குமார், மற்றும் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.